[1970 ஏப்ரல் 8

Police escort for night express buses.

* 723 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minsiter for Public Works be pleased to state whether special police escort have been provided to the State Transport buses during nights on long distance routes?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. க. கோமதி சங்கர திட்சதர்: நீண்ட நேரம் ஸ்டேட் பஸ்ஸிலே பிரயாணம் செய்ய வேண்டிய நிலைமை இருப்பதால் ஏற்படக்கூடிய அபாயங்களைத் தடுப்பதற்காகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்போது கனம் அங்கத்தினர் சொல்வது போன்ற நிலைமை இல்லை. எனவே பாது காப்புக்குத் தனியாகப் போலீஸ் இருக்க வேண்டுமென்று அரசு கருத வில்லை.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, மதுரைக்கும் திருச்சிக் கும் மத்தியிலே இரவு நேரங்களிலே டாக்ஸிகளையும் பிளஷர் கார்களையும் கொள்ளையடிப்போர் நிறுத்திப் பல தடவைகள் வழிப்பறி செய்து இருக் கிறார்கள். அந்த நிலைமை ஸ்டேட் பஸ்ஸிலேயும் ஏற்படலாம் என்று எதிர்பார்த்து, குறைந்த பட்சம் ஒரு ஆயுதம் தாங்கிய சிப்பாயையாவது கூட அனுப்புவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது போன்ற எண்ணம் அரசுக்கு இல்லை. ஏற்கனவே டபிள்-டெக்கர் பஸ்களில் ஹெட் கான்ஸ் டபிள் நிலைமையில் உள்ள காவலரை அனுப்புவதற்குத் திட்டம் இருந்தது. 1-9-1969-லிருந்து அது கைவிடப்பட்டது.

திரு. நா. காசிராமன்: ஸ்டேட் பஸ்களிலே இரவு நேரத்திலே செல்லும் பொழுது தனியான போலீஸ் பாதுகாப்புத் தரவேண்டுமென்ற முறையிலே தமிழ் நாட்டில் பஸ்களில் அக்கிரமங்கள் நடந்திருக்கின்ற கின்றனவா? வழிப்பறி கொள்ளைகள் நடந்திருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரசாங்க பஸ்களில் அது போல் நடந்ததாகத் தகவல் இல்லை.

திரு. கே. சகாதேவ கவுண்டர்: இரவு நேரங்களில் ஸ்டேட் பஸ்கள் செல்கின்ற நேரத்திலே ஸ்டெப்பினி டயர் இல்லாமல் இருப்பதால் பொது மக்களுக்குப் பல பாதகங்கள் ஏற்படுகின்றன. அதைப் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்பொழுது அரசாங்க பஸ்களிலே ஸ்டெப்பினி இருந்து வருகிறது.

Thiru B. VENKATASWAMY: Sir, on a former occasion the Hon. Minister for Transport has stated that there is a proposal to introduce night bus service from Madras to Bangalore............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காவல் போட்டு அனுப்புவது பற்றித்தான் கேள்வி. ஆகவே இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்டேட் பஸ்கள் எல்லாமே புகையை அதிகமாகக்கக்குவதனாலே மனிதனுடைய ஆயுளைக் குறைக்கின்ற........

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கேள்வியைப் பாருங்கள் காவல் போட்டு அனுப்புவது பற்றித்தான். எனவே அதைப் பற்றித்தான் கேட்கவேண்டும்.